**<u>பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் ரிப்பன் மாளிகையில் இன்று 15.12.2018 நடைபெற்ற பத்திரிக்கையாளர்கள் கூட்டத்தில் தெரிவித்தாவது</u>**

பெருநகர சென்னை மாநகராட்சியின் கல்வித்துறையின் கீழ் சென்னை தொடக்கப்பள்ளிகள் 119, நடுநிலைப் பள்ளிகள் 92, உயர்நிலைப் பள்ளிகள் 38 பள்ளிகள் மற்றும் 32 மேல்நிலைப் பள்ளிகள் என ஆக மொத்தம் 281 சென்னைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. மேலும் சென்னை தொடக்க/நடுநிலைப் பள்ளிகளில் 200 மழலையர் பள்ளிகளும் இயங்கி வருகின்றன.

இதில் தொடக்கப் பள்ளிகளில் 27312 மாணவ/மாணவியர்கள், நடுநிலைப் பள்ளிகளில் 17874 மாணவ/மாணவியர்கள், உயர்நிலைப் பள்ளிகளில் 9117 மாணவ/மாணவியர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் 29,013 மாணவ/மாணவியர்கள் என மொத்தம் 83316 மாணவ/ மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

- சென்னை பள்ளி 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் **100 சதவிகிதம் தேர்ச்சி** பெற்ற 33 பள்ளிகளுக்கு ரூ.33,00,00/– ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

- 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்று உயர்படிப்பிற்காக பொறியியல், மருத்துவம், பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, செவிலியர் மற்றும் சட்டப் படிப்பு கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு **உயர்படிப்பு ஊக்கத் தொகையாக** ரூ. 2,17,02,000/– வழங்கப்பட்டது.

- 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் உயர் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும், அதிக மதிப்பெண் பெற ஆசிரியர்களுக்கும் **ரொக்கப் பரிசாக** ரூ.45,24,700/– தொகை வழங்கப்பட்டு வருகிறது.

- **100 சதவிகிதம் வருகை** தரும் மாணவர்களுக்கு ரொக்கப் பரிசு ரூ.28,24,000/– வழங்கப்பட்டுள்ளது.

- ரூ.1,88,78,504/–செலவில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு, மாணவ/மாணவியர்கள் மாலை நேர சிறப்பு வகுப்பில் சோர்வின்றி படிக்க ஏதுவாக புரதச்சத்துமிக்க, சுவையான **100 கிராம் “சுண்டல்”** தினமும் வழங்கப்படுகிறது.

- 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பொதுத் தேர்வில் பங்கு பெறும் மாணவ/மாணவியர்களுக்கு அதிக மதிப்பெண் பெறுவதற்கு **ஜெயித்துக் காட்டுவோம் நிகழ்ச்சி** ரூ6,23,244/–செலவில் மேற்கொள்ளப்பட்டது.

- 70 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், கற்றல் கற்பித்தல் தொய்வின்றி சிறந்து விளங்க **மின்னாக்கிகள்** பொருத்தப்பட்டுள்ளன.

- **வளவகுப்பறை** மற்றும் **நவீன வளவகுப்பறை**, 84 சென்னைப் பள்ளிகளில் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

- சென்னை மாநகராட்சியும் தனியார் நிறுவனம் SAMSUNG இணைந்து சீர்மிகு மின்னணு வகுப்பறை 28 பள்ளிகளில் செயல்பட்டு வருகின்றன.

- 200 மழலையர் பள்ளிகளில் பயிலும் மழலையர்களுக்கு விலையில்லா வண்ணச் சீருடை மற்றும் புத்தகங்கள் வழங்கப்படுகிறது.

- 9 முதல் 12 வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்க **சீருடைகள்** கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் வழங்கப்பட்டு வருகின்றது.

- சென்னை பள்ளி மாணவர்களின் பொது அறிவினை மேம்படுத்தும் வகையில் 254 பள்ளிகளில் நூலகம்: நிறுவப்பட்டு அதில் 3,39,602 புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளது.

- மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் வகையில் அறிவியல் ஆய்வகம், கணித ஆய்வகம், பண்முகத் திறன் மேம்படுத்தும் ஆய்வகம், ஆங்கில ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது.

- மாணவர்களின் பொது அறிவை வளர்க்கும் நோக்கில் சென்னைப் பள்ளிகள் அனைத்திலும் தினசரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்கள் ரூ.3,30,387/– தொகையில் வழங்கப்பட்டு வருகின்றது.

- சென்னை உயர்நிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற 50 மாணவ/மாணவியர்கள் **தேசிய சுற்றுலா** ரூ.8,56,474/– அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

- சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களக்கு 5 முதல் 12 வகுப்பு வரை **விலையில்லா விடைத்தாள்கள்** வழங்கப்பட்டு வருகின்றது.

- 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் அறிவியல் பிரிவில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு **விலையில்லா செய்முறை ஏடு** வழங்கப்பட்டு வருகின்றது.

- 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் அறிவியல் பிரிவில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு விலையில்லா ஆய்வகச் சட்டை வழங்கப்படுகிறது.

- பள்ளி மற்றும் மாணாக்கர்களின் பாதுகாப்பிற்காக பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் **தற்காலிக பாதுகாவலர்கள் ரூ.2,35,03,920/–** தொகையிலும் **தற்காலிக கணினி ஆசிரியர்கள், கணினி உதவியாளர்கள்** இளநிலை உதவியாளர் மற்றும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் 2017–18 ஆம் ஆண்டில் **ரூ.1,94,13,000/–** தொகையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- மாணவர்களிடையே விளையாட்டுத் திறனை மேம்படுத்த ஆண்டுதோறும் சென்னை பள்ளிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் விதிமுறைகளின்படி ரூ.21,54,000./– செலவில் நடத்தப்பட்டுள்ளது.

- **Spark Integrated Programme** திட்டத்தில் பதினோராம் வகுப்பைச் சார்ந்த மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். இத்திட்டத்தின் நோக்கம், இம்மாணாக்கர்கள் அனைவரும் மருத்துவக் கல்லூரிகள் / பொறியியல் கல்லூரிகள் மற்றும் நாட்டின் தலைசிறந்த கல்லூரிகளில் சேர்ந்து உயர்கல்வி பயில வேண்டும் என்பதாகும்.

- **<u>உண்டு உறைவிடப் பள்ளிகள்:</u>** சென்னை மேல்நிலைப் பள்ளி, சுப்புராயன் தெரு மற்றும் சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சைதாப்பேட்டை ஆகிய இரு பள்ளிகளில் ரூ.32,50,930/– தொகையில் உண்டு உறைவிடப் பள்ளிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு 100 சதவிகிதம் தேர்ச்சி விழுகாடு பெறப்பட்டுள்ளது.

- உறுதியான கட்டிடங்கள், காற்றோட்மான வகுப்பறைகள், அனைத்து வகுப்பறைகளிலும் மின்வசதி, மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கழிவறைகள் , மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப குடிநீர் குழாய்கள் மற்றும் கழிவறைகள், கழிவறைகளை பராமரிக்க மண்டல அலுவலகளின் மூலம் பெருக்குபவர்கள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்வதற்கான பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- சுத்திகரிக்கப்பட்ட தூய்மையான குடிநீர் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

- கல்வியில் சிறந்த நிலை அடைய சென்னைப் பள்ளி ஆசிரியர்களுக்கு புதுமைப் பள்ளித் திட்டம் 21ஆம் நூற்றாண்டு திறன்கள் (21st Century Skills) British Council மூலமாக நடத்தப்படுகிறது. **SNF @ SCHOOLS** என்ற அமைப்பு மூலம் ஆசிரியர்களுக்கு உடல் நலம் மற்றும் ஆரோக்கிய ஒருங்கிணைப்பிற்கான பயிற்சி அளிக்கப்பட்டது.

- **Tech Mahindra Foundation** சென்னை தொடக்க/நடுநிலைப் பள்ளி 230 ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

- **அகஸ்தியா பௌண்டேஷன்** நடமாடும் அறிவியல் ஆய்வகம் கொண்டு 6 முதல் 8 வரை உள்ள வகுப்பு அறிவியல் பாடத்தை எளிய உபகரணங்களைக் கொண்டு போதிக்கின்றது.

- 6 இடங்களில் **சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையம்** பிரத்தியேகமாக சென்னை பள்ளி மாணவர்களுக்கும் மற்றும் சமுதாயத்தில் பின்தங்கிய ஏழை எளிய மாணவர்களுக்கு கணினி, எல்க்ட்ரீஷன், பிட்டர், மெக்கானிக், எல்க்ட்ரானிக் மெக்கானிக் போன்ற தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

- Teach for India மூலம் மாணவர்களுக்க ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் ஆகிய பாடங்கள் ஆசிரியர்களோடு இணைந்து பயிற்றுவிக்கப்படுகின்றது.

- **ஸ்ரீ இராமசரண் அறக்கட்டளையி**ன் மூலம் சென்னை மழலையர் பள்ளி மாணவர்களுக்க கற்பித்தல் உபகரணம் மற்றும் தேவையான ஆசிரியர்கள் உதவியாளர்கள் வழங்கப்பட்டுள்ளது.

- Atal Tinking Lab என்ற எம்எச்ஆர்டி வாயிலாக மத்திய அரசால் சென்னை பள்ளிகள் 12 தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ROBORT பற்றிய சிறந்த அறிவும் ஆற்றலும் உருவாக ஏதுவாக ரூ.10.00 இலட்சத்தில் ஆய்வுக் கூடம் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.